அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624



அ.எண் : 86/2017

தேதி : 07/09/2017

**கோவை சோமனூரில் பேருந்து நிலைய கட்டிட விபத்து**
**5 பேர் பலியான சம்பவம்**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்**
**நிறுவனத் தலைவர், திரு.ஆர்.சரத்குமார் இரங்கல்.**

கோவையில் உள்ள சோமனூர் பேருந்து நிலையத்தின் கூரை இடிந்து விழுந்து 5 பேர் பலியான சம்பவம் வேதனை அளிப்பதாக உள்ளது. பயணத்தின்போது பயணிகளின் பாதுகாப்பிற்கு உத்தரவாதம் தரவேண்டிய போக்குவரத்துக் கழகங்கள், பயணிகள் பேருந்திற்காக காத்திருக்கும், பேருந்து நிலையங்களிலும் தகுந்த பாதுகாப்பை அளிக்கவேண்டும். குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை கட்டிடங்களையும், அதன் உறுதி தன்மையையும் சரிபார்த்து இதுபோன்ற விபத்துக்கள் ஏற்படாதவாறு, போக்குவரத்து கழக அதிகாரிகளும், அரசும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும். எதிர்பாரத விதமாக ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினர்களுக்கு சமத்துவ மக்கள் கட்சியின் சார்பில் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆர்.சரத்குமார்**
தலைவர் - பொதுச்செயலாளர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com